அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்ய நியாய விலைக் கடைகள் எல்லா இடங்களிலும் திறந்திருக்கிறோம் என்று சொல்லப்பட்ட போதிலும், அந்தப் பண்டங்கள் கிடைக்க வில்லை. அவைகள் தடையில்லாமல் கிடைப்பதற்கு ஏற்பாடு களை அரசு செய்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலைமையை பாதுகாப் பதற்காக 100 கோடி ரூபாய் செலவில் பெரிய திட்டம் போடப் பட்டிருப்பதாக சொல்கிறார்கள். 100 கோடி ரூபாய் என்று சொன்னாலே விவசாயிகள் எல்லாம் நமக்காக 100 கோடி ரூபாய் செலவா என்று நினைப்பார்கள். ஆனால் எத்தனை ஆண்டுகளில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்? 50 ஆண்டு களிலா, 15 ஆண்டுகளிலா? எப்படி இந்த 100 கோடி ரூபாயைச் செலவு செய்யப் போகிறார்கள்? அவர்களுக்கு ரோடுகள் போடப் போகிறார்களா? அந்தக் காரணங்களையெல்லாம் சொல்ல வில்லை. விளை பொருள்களைக் கொண்டு செல்ல சரியான சாலை வசதிகள் இல்லை கிராமப்புறங்களிலே. அப்படி ரூரலாக உள்ள ஏரியாக்களுக்கு ரோடுகள் போட்டு சாலைகளைச் செப்பனிட்டு போதிய நடவடிக்கைகளை எடுக்காத காரணத் தினால் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் நின்றிருக் கின்றன. இந்தத் திட்டம் உண்மையிலேயே பயன் உள்ளதாக இருக்கலாம். ஆனால் அவை உரிய காலத்திலேயே நிறை வேற்றப்பட வேண்டும், அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையங்களைப் பாதுகாத்து மேம்படுத்தப் போகிறோம் என்று அறநிலையத்துறை அமைச்சர் கூறியிருக்கிறார்கள், ஆனால் அறநிலையங்களில் போடுகிற அறங்காவலர்களை எல்லாம் எப்படிப் பார்த்து போடுகிறார்கள் என்றால், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களைத்தான் போடுகிறீர்கள். அதை ஒன்றும் சொல்லவில்லை; போட்டுக் கொள்ளுங்கள். நிர்வாகம் பண்ணுகிற தகுதியில்லாத ஆட்களாகப் பார்த்து போடுகிறீர்கள். பல்வேறு இடங்களிலே எம். ஜி. ஆர். மன்றங்களிலே உள்ளவர் களையெல்லாம் போடுகிறீர்கள். இப்படிச் செய்வது அறநிலை யங்களில் அறத்தைக் காப்பதற்குப் பயன்படாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தகுதி உள்ள ஆட்களை அதற்கு நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்வீஸ் கமிஷனிலே 1977 ஆம் ஆண்டிலே தேர்வு செய்யப் பட்டவர்களுக்கு இதுவரையிலும் வேலை கொடுக்கவில்லை. இவர்கள் வேலையில் இருந்து 1 ஆண்டு, 2 ஆண்டுகள் வேலையில் இருந்த பின்னர் (ஊஸ்ட்) பதவி விலக்கம் செய்யப்பட்டவர்கள், அவர்கள் தனியாக தேர்வு எழுதி, தேர்வு செய்யப்பட்டவர்கள்.